20th January 1965]

போக்கு வரத்துச் செலவுக்குக்கூட கட்டுப்படியாவதில்லே. ஆகவே அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவது இன்னும் செம்மையாக அவர்கள் நடந்துகொள்வதற்கும், கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிடைப்பதற்கும் நல்ல அனுகூலமாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எல்லா இடங்களிலும் ப்ரைமரி சுகாதார நிலையங்கள் ஆரம்பித்துவிட்டால் இந்தப் பிரச்சினேக்கே இடமில்லே. இன்றைய தினம் ப்ரைமரி சுகாதார நிலையங்கள் ஏற்பட்டுள்ள இடங்களில் டாக்டர்கள் வாரத்திற்கு இரண்டு முறை சப்சென்டர்களுக்குப் போய்வருகிருர்கள். இது கிராம மக்களுக்கு வைத்திய வசதி பெற உதவியாய் இருக்கும்.

திரு. எம். தண்டாயுதபாணி : தற்போது பஞ்சாயத்து கூட்டு மன்றங்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் லோகல் பண்டு ஆஸ்பத்திரிகளில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப் போடவேண்டுமென்ருல் அனுமதி வழங்கப்படுவதில்லே. அந்த டாக்டர்களுக்கு ஆகும் செலவை அவர்களே சரிக்கட்டிக்கொள்ளத் தயாராக இருக்கும் போது அனுமதி வழங்குவதற்கு முன் வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தாலுகா தலேநகர ஆஸ்பத்திரிகளில் நியமிக்கப்படுவதற்கே எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிடைக்கவில்லே ; அதனுல்தான் அனுமதி வழங்கப்படுவதில்லே. ஆனுலும் இந்த டாக்டர்களும்கூட நல்ல அனுபவம், திறமை மிக்கவர்கள் தாம்.

ஹௌஸ் சர்ஜன்களுக்கான கௌரவ ஊதியம்

*** 26 கேள்வி.— திரு. வி. எஸ். எஸ். மணி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் ஹௌஸ் சர்ஜன்களுக்குத் தற்போது கொடுக்கப்படும் கௌரவ ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

(இ) முதுநிலே ஹௌஸ் சர்ஜன்கள் தனியே மருத்துவம் பார்க்க அனுமதிக்கப்படுகிருர்களா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) No.

மேல்மட்ட நீர்த்தொட்டிகள்

*** 27 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1963-64 முடிய எத்தனே மேல் மட்ட நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன?

(இ) எத்தனே தொட்டிகளுக்கு (ஓவர் ஹெட் டாங்க்) மின்சார இணைப்பு கொடுக்கவில்லே? காரணமென்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) எழு.

[20th January 1965

(இ) தெருமுலேயில் உள்ள ஒரு தொட்டிக்கு மட்டும்தான் இன்னும் இணைப்பு கொடுக்கபடவில்லை. அந்த கிராமத்திற்கு இன்னும் மின்சாரம் வாரததே இந்தத் தாமதத்திற்குக் காரணம்.

* 28 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் செய்யாறு வட்டத்தில் சில ஊர்களுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1958-ல் அனுமதிக்கப்பட்ட மேல் நிலைக் குடிநீர்த் திட்டம் (ஓவர் ஹெட் டாங்க்) இப்போது கைவிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்ருல் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) வெம்பாக்கம் அபிவிருத்தி வட்டாரத்தில் வடமனப்பாக்கம் கிராமத்தில் மேல் நிலைக் குடிநீர்த் தொட்டி ஒன்றைக் கட்ட 1958-ல் உத்தேசித்திருந்தது. இது பின்னர் கைவிடப்பட்டது.

(இ) வெம்பாக்கம் அபிவிருத்தி வட்டார ஆலோசனைக் குழு 24—1—1959-ல் நடைபெற்ற தனது கூட்டத்தில், இவ்வாட்டாரத் திட்ட வேலைகளிலிருந்து மேற்சொன்ன வேலையை நீக்கிவிட்டது. இதற்கான காரணத்தை அது குறிப்பிடவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட கிராம குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 15 கோடி ரூபாயில் 10 கோடி ரூபாய் இதுவரை செலவு செய்யப் படாமல் சரணடைகிற நிலையில் இருக்கிறதா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

கனம் சபாநாயகர் : எந்த ராஜ்யத்தில் ?

SRI K. A. MATHIALAGAN : Out of Rs. 15 crores allotted for rural water-supply schemes, Rs. 10 crores is going to be surrendered.

இத்திட்டத்தின் கீழ் 10 கோடி ரூபாய் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நான்கு வருடங்கள் ஆகியும் செலவு செய்யப் படாமல் இருக்கிறது. இதற்கான காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் பத்திரிகையில் வந்தது. பதினைந்து என்பதற்குப் பதிலாக 1.5 என்று வந்ததாக ஞாபகம். அதை வைத்துச் சொல்கிருர்களோ என்னவோ ?

திரு. கே. ஏ. மதியழகன் : பத்து கோடி ரூபாய் இன்னும் செலவிடப்படவில்லை. இதை அமைச்சர் அவர்கள் மறுக்கிருர்களா என்று கேட்கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பதினைந்து என்பதற்குப் பதிலாக 1.5 என்று பத்திரிக்கையில் வந்தது. புள்ளி விழுந்து விட்டது.